**செய்தி வெளியீடு எண் : 239** **நாள் : 05.02.2023**

**<u>மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் திரு. மு.பெ.சாமிநாதன் அவர்களின் இரங்கல் செய்தி</u>**

இன்று (05.02.2023) திரைப்பட இயக்குநரும், நடிகருமான திரு. டி.பி.கஜேந்திரன் (வயது 68) அவர்கள் காலமானார் என்ற செய்தி அறிந்து மிக மனவருத்தம் அடைந்தேன். எங்க ஊர் காவல்காரன், மிடில் கிளாஸ் மாதவன், பட்ஜெட் பத்மநாபன் உள்ளிட்ட பல வெற்றிப் படங்களை இயக்கி மற்றும் பல படங்களில் நடித்து, ரசிகர்கள் மனதில் நீங்கா இடம் பிடித்தவர்.

திரு. டி.பி. கஜேந்திரன் அவர்களை இழந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கும், திரைத் துறையைச் சேர்ந்த நண்பர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறேன்.

- - - -

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in